**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 77/2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 06th day of August 2024.

**(A1 and A2 are present. )**

**S.C. No. 77/2019**

**06.08.2024**

**அ.த.சா.1 - திரு.தமிழ்வாணன் , த/பெ. ஜானகிராமன்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் அரசு பேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.10.2018 அன்று சென்னையிலிருந்து ஆரணிக்கு டிஎன் 25 என் 0326 தடம் எண். 202 y என்ற பேருந்தை 07.45 மணிக்கு சென்னையில் எடுத்தேன். என்னுடன் பார்த்திபன் நடத்துனராக பணியில் இருந்தார். சென்னையிலிருந்து ஆரணியை நோக்கி வந்துக்கொண்டிருந்தபோது சுமார் 08.30 முதல் 08.45 மணியளவில் பாப்பன்சத்திரத்தில் பேருந்தை நிறுத்தமாட்டோம். மக்கள் கடந்து செல்கின்ற பாதை அங்கு உள்ளது. ரவீந்திரநாத் என்பவர் ரோட்டை கடந்து செல்பவர்களுக்கு உதவியாக இருந்தார். அவர் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். ரவீந்தரநாத் என்பவர் பேருந்துக்கு முன்னால் நின்றுக்கொண்டு பேருந்துக்கு வழிவிடாமல் அவரது முழுக்கை சட்டையின் கைப்பகுதியை மடக்கிகொண்டும் அதன்பின்னர் சீப்பை எடுத்து முடியை சீவி கொண்டும் இருந்தார். பின்னர் வலது பக்கத்தில் இருந்து வந்தார். ஏன் மற்ற வண்டி எல்லாம் கடந்து போகும்போது என் வண்டிக்கு வழி விடவில்லை என்று கேட்டபோது நான் இந்த ஊர் பகுதியை சேர்ந்தவன் என்று என்னை போடா நாயே என்று அசிங்கமாக திட்டினார். அதன்பிறகு லைட்டரை வைத்து நான் லோக்கல் இதுமாதிரி தான் பண்ணுவேன், ஓத்தா வண்டியை எடுத்துக்கொண்டு அடிவாங்குவதற்கு முன்னால் ஓடிவிடு என்று கூறினார். அவரை பார்த்து நான் அறிவில்லாமல் செய்கிறாய் என்று கையை நீட்டி பேசினேன். அவர் சிக்னல் கடக்க பயன்படுத்தும் நீளமான லைட்டரை வைத்து என்னை அடித்தார். பின்னர் ரவீந்தரநாத் முருகன் என்பவரை அழைத்து அவர்

வந்ததும் எதுவும் கேட்காமல் என் சட்டையை பிடித்து இழுத்து ஓத்தா என்று எனது தாயாரை அசிங்கமாக திட்டினார். வண்டியிலிருந்து என்னை கீழே இறங்குடா, உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொன்னார். நடத்துனர் ஓடிவந்து கதவை அடைத்து பின்னர் வண்டியை எடுத்து வந்துவிட்டேன். கூட்டமாக அந்த இடத்தில் இருந்தது. பின்னர் வண்டியை நகர்த்தினேன். வண்டியின் பின் கண்ணாடி உடையும் சத்தம் கேட்டது. உடைத்தது யார் என்று நான் பார்க்கவில்லை. பாதுகாப்பாக வண்டியை ஓரமாக நிறுத்தி பயணிகளை அடுத்த பேருந்தில் பயணம் செய்ய ஏற்பாடு செய்தோம். திருமலை என்ற வழக்கறிஞர் ஒருவர் பேருந்தில் பயணம் செய்தார். அவர் என்னை நசரத்பேட்டை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள். இந்த சம்பவத்தால் தொடர்ந்து பேருந்தை இயக்க முடியாததால் பயணிகள் அவதியுற்றார்கள். அதனால் எனது பேருந்துக்கும் வருமான இழப்பு ஏற்பட்டது. அந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் நீதிமன்றத்தில் உள்ளார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO.77/2019**

| Deposition of Witness for | Prosecution PW2<br>Defence<br>Court |
|---|---|

| | |
|---|---|
| Name | : |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 06$^{th}$ day of August 2024.

**(A1 and A2 are present. )**

# S.C. No. 77/2019

# 06.08.2024

**அ.த.சா.2 - திரு. பார்த்திபன், த/பெ.அர்ஜீனன்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் அரசு பேருந்தில் நடத்துனராக உள்ளேன். கடந்த 31.10.2018 அன்று தடம் எண் 202 y , டிஎன் 25 என் 0326 என்ற எண் கொண்ட பேருந்தில் நடத்துனராக பணி செய்தேன். கோயம்பேட்டிலிருந்து 07.40 மணிக்கு பேருந்தை எடுத்தோம். அதில் ஓட்டுநராக தமிழ்வாணன் இருந்தார் (சாட்சி-1) . பேருந்து பாப்பன்சத்திரம் அருகே காலை 08.50 மணிக்கு வரும்போது பாதசாரிகள் கடக்கும் வழி அருகே டிரைவரை வண்டியை ஒருவர் நிறுத்த சொன்னார். டிரைவர் வண்டியை நிறுத்தினார். நிறுத்தியபிறகு ஏன் நிறுத்தமாட்டாயா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். டிரைவருக்கும் நிறுத்தியவருக்கும் இடையில் வாதம் உண்டானது. நான் டிரைவரிடம் சென்று பேருந்தை எடுக்கச்சொன்னேன். பேருந்தை 10 அடி நகர்த்திய உடன் பின்னாடி கல் எறியப்பட்டு பேருந்தின் கண்ணாடி உடைந்தது. உடனே வண்டியை ஓரமாக நிறுத்தினோம். வண்டி கண்ணாடியை உடைத்தவர்கள் யார் என்று தெரியவில்லை. பயணிகளுக்கு இடையூறு ஏற்படாமல் வண்டியை நிறுத்தினோம். பயணிகளுக்கு அடி எதுவும் படவில்லை. பயணிகளை மாற்று பேருந்தில் அனுப்பி வைத்தோம். பேருந்தில் வழக்கறிஞர் திருமலை என்பவர் பயணம் செய்தார். அவர் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கச் அழைத்து சென்றார். அன்று பேருந்து காலதாமதமாக இயங்கியது. 12.00 மணிக்கு பேருந்தை இயக்க முடியவில்லை. மாலை 06.00 மணிக்கு பேருந்தை பணிமனைக்கு கொண்டு சென்றோம். அன்றைய தினம் சம்பவத்தினால் பேருந்தை இயக்க முடியவில்லை. வண்டியை நிறுத்தியவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். அதனால் பேருந்துக்கு சேதமும்

வருமான இழப்பும் ஏற்பட்டது. டிரைவர் புகார் அளித்தார். நான் உடன் சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறுகிறார்.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.